MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# பின்காலனிய ஆட்சியில் அடித்தட்டு மக்களின் அவலமும் ஒடுக்கு முறைகளும்

**ஆய்வாளர்**

மரியராணி தே,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம் - 629 165
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி

**நெறியாளர்**

முனைவர். சு.சு. ஷீபா
இணைப் பேராசிரியர்,தமிழ்த்துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம் - 629 165
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

# The plight and oppression of the lower classes under post-colonial rule

**Researcher**

Mariyarani D

PhD Researcher: Full-time, Tamil Department

Nesamani Memorial Christian College

Marthandam-629165

Manonmaniam Sundaranar University, Tirunelveli

**Advisor**

Professor S.S. Sheeba

Associate Professor

Tamil Department

Nesamani Memorial Christian College

Marthandam-629165

Manonmaniam Sundaranar University, Tirunelveli

**Abstract:**

This study examines the social, economic, and political status of the grassroots people during the post-colonial rule. Although political independence was achieved, complete independence was not realized because the power and unbalanced structures created during the colonial rule continued to operate. Land ownership loss, low wages, and exclusion from education and political participation intensified their plight. It emphasizes the need to analyze these plights and move towards social justice and equality. It points out how the voices of the oppressed people are silenced.

**Keywords:**

Postcolonialism, Subaltern people, Oppression, Social justice, Economic exploitation Caste discrimination, Neocolonialism, Social change

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**ஆய்வுச்சுருக்கம்:**

இவ்வாய்வு பின்காலனிய ஆட்சி காலத்தில் அடித்தட்டு மக்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலையை ஆராய்கிறது. அரசியல் சுதந்திரம் கிடைத்தப் போதிலும் காலனிய ஆட்சியில் உருவான அதிகார மற்றும் வளப் பகிர்வு சமநிலையற்ற அமைப்புகள் தொடர்ந்து செயல்பட்டதால், முழுமையாக சுதந்திரம் கிடைக்காத நிலையே நீடிக்கிறது, நில உரிமை இழப்பு, குறைந்த கூலி, கல்வி மற்றும் அரசியல் பங்கேற்பில் புறக்கணிப்பு போன்றவை அவர்களின் அவலங்களை தீவிரப்படுத்தின. இந்த அவலங்களை ஆராய்ந்து, சமூகநீதி மற்றும் சமத்துவம் நோக்கி முன்னேற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் எவ்வாறு மௌனப்படுத்தப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அடக்குமுறை கோட்பாட்டின் வெளிச்சத்தில் சமூக ஒடுக்குமுறையின் ஆழமான தாக்கங்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:**

பின்காலனியம், அடித்தட்டு மக்கள், அடக்கு முறை, சமூக நீதி, பொருளாதார சுரண்டல், சாதி பாகுபாடு, புதிய காலனித்துவம்,சமூகமாற்றம்

**முன்னுரை:**

சமுதாயத்தில் மக்களை உயர்ந்தோர் தாழ்ந்தோர் என வேறுபடுத்திப் பார்க்கும் நிலைக் காணப்படுகிறது. மனிதர்கள் அனைவரும் உள்ளார்ந்தச் சுதந்திரத்தோடும், மாண்போடும், உரிமைகளோடும், சமத்துவத்தோடும் பிறக்கிறார்கள். என்றாலும், ஆதிக்கச் சாதியினரால் அடித்தட்டு மக்கள் புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையைக் காண்கிறோம். மக்கள் தங்கள் உடலாலும், உள்ளத்தாலும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

அனுபவித்தக் கொடுமைகள் பல, மறுக்கப்பட்ட உரிமைகள் பல, இழந்தவைகள் பல, அடித்தட்டு மக்கள் மீதான வன்முறைகளையும் அதனை அவர்கள் எதிர்கொண்டத் தன்மையினையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**அடித்தட்டு மக்கள் :**

சாதி, சமய, சமூக, பொருளாதார அமைப்பில் தொழில் ரீதியாக முன்னேறியவர்கள் மேல் தட்டு மக்கள் எனவும், தொழில் அடிப்படையில் முன்னேறாதவர்களை கீழ்த்தட்டு மக்கள் எனவும் கருதும் வழக்கம் இருந்தது. இவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் என கருதுகின்றனர்.

"அடித்தட்டு மக்கள் என்று குறிப்பிடப்படும் நபர்கள் சமூகத்தில் எந்த விதமான அங்கீகாரமும் இல்லாதவர்கள். தங்களுடைய உரிமைக்காகப் போராடுபவர்கள் தற்போது இருக்கின்ற நிலையைத் தக்க வைத்துக் கொள்வதில் அந்த மக்கள் மிகுந்தக் கவனமாக இருக்கின்றனர்".(1) மேலும் "சமுதாய அடுக்கில் கீழ்நிலையில் விளிம்பின் ஓரத்தில் இருப்பவர்களையே அதாவது, சாதி, சமயம், பால், இனம் என்ற எல்லாத் தளங்களிலும் ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, தாழ்நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள், தேவதாசிகள், பாலியல் தொழிலாளிகள், அரவாணிகள், தொழுநோயாளிகள், அனாதைகள்,

ஆதரவற்றோர்கள், மாற்றுத்திறனாளிகள் முதலானவர்களே விளிம்புநிலை மனிதர்களாவர்"(2) இவற்றை தலித் இலக்கியங்களும் சுட்டுகின்றன.

**பண்பாட்டு ஒடுக்குமுறைகள்:**

அடித்தட்டு மக்களின் உழைப்பை சுரண்டுபவர்களாக பெருமுதலாளிகள் இருந்தனர். பண்பாட்டு அரசியல் சூழ்ச்சியின்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மூலமாக தங்கள் மீது நடத்தப்படும் ஒடுக்கு முறையை ஒடுக்கப்பட்ட மக்கள் எந்தவித எதிர்ப்பும் இன்றி இயல்பாய் ஏற்றுக்கொள்ளும் மனநிலைக்குத் தள்ளப்பட்டனர். பண்பாட்டுக் கூறுகளின் ஒரு பகுதியான ஆடைகள், அணிகலன்கள், பிற புழங்கு பொருட்கள், உணவு என யாவற்றிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது.

ஆதிக்கச் சாதியினர் தலித்துகளுக்கு புழங்கு பொருட்கள் மீதும் உணவுப் பொருட்கள் மீதும் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் மேல் கீழ் என்ற சாதியக் கட்டுமானத்தைத் தக்க வைக்க முனைகின்றனர். தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சிலப் பொருட்களை விலக்கப்பட்டதாய் அறிவிப்பதன் மூலம் அவர்களைக் கீழ் நிலையினராய் உணரச் செய்யும் பண்பாட்டு சூழ்ச்சி முறையை மேற்கொண்டுள்ளனர். இதனை அதிகார மனத்தின் உச்ச வெறிநிலை என்றே கூற வேண்டும்.

**அடிதட்டு மக்களின் வாழ்க்கை:**

இம்மக்களின் வாழ்க்கை வெறும் அழுகையோடும் பற்கடிப்புகளோடும் மட்டும் இருக்கவில்லை. மாறாக, மானமிக்கக் குடிகளாக வாழ்ந்திருக்கிறார்கள். அறிவுடையவர்களாலும், மேல்சாதியினாராலும், மேலைநாட்டினராலும், சாதியத்தினாலும் வீழ்த்தப்பட்டப் போதும், சேரிகளில் வதைப்பட்டப் போதும்,

ஆதிக்கத்திற்கு எதிராக போராடியிருக்கிறார்கள். எண்ணற்ற உயிர்களை பலி கொடுத்திருக்கிறார்கள். நிலம், வீடு, வாசல் அனைத்தையும் பறி கொடுத்திருக்கிறார்கள்.

"ஆதிக்க வெள்ளத்தின் அடியிலே கிடந்தாலும்
பாதிக்கப் படாதலனே! பாஸ்பரசே கண் விழிப்பாய்!"(3)

உழைப்பைச் சுரண்டுபவர்களால் தொடர்ந்து பழிவாங்கப்பட்டும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

அல்லல் பட்டும், வட்டி கந்துவட்டித் தொல்லைகளினால் காலம் முழுவதும் பஞ்சமோ, பசியோ இதுதான் வாழ்க்கை. இதுதான் சாபக்கேடு என்றுக் குறுகிப் பார்க்கும் அறிவின் பலவீனங்கள் பல நிறைந்தவை தான் தலித் மக்களின் வாழ்வு.

**அடிதட்டு மக்களின் எதிர்பார்ப்புகள்:**

கொடுமை மிகுந்த வாழ்க்கை அனுபவங்கள் போதிய அளவு இன்றும் இலக்கியத்தில் வெளிப்படவில்லை. இவர்களின் வாழ்க்கையும், தோற்றமும், வாழும் சூழலும் அளவிடற்கரியன.

தீண்டாமையும் சாதியும் நமது கலாச்சாரத்தின் கரும்புள்ளிகள். இவற்றை அழித்தொழிக்க வேண்டும். அதற்கு முதற்படியாக சாதி இருக்க வேண்டுமா வேண்டாமா என்ற சர்ச்சை நமது சமூகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நடக்க வேண்டும். அதற்கு இலக்கியங்கள் தூண்டுகோலாய் அமைய வேண்டும்.

நிலம் உள்ளிட்ட அடித்தட்டு மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் ஒருங்கிணைந்தப் போராட்டத்தில்தான் கிடைக்கும். உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையே சமூக மாற்றத்திற்கான போராட்டத்தின் அச்சாணியாக இருக்க முடியும். ஆகவே, உழைக்கும் வர்க்கத்தின் பரந்த மேடையில் நின்று கொண்டு அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின்

விடுதலைக்காகவும் குரல் எழுப்ப வேண்டும்.

"அடைக்க அடைக்கப் பீறிடுகின்ற
பிரபஞ்சத்தின் ஊற்றுக் கண்"(4)

அடித்தட்டு மக்கள் அவர்களின் வாழ்வாதாரங்கள் மேம்பட சாதி, மத, இன வேறுபாடுகளை களைந்து அனைவரும் ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**தொழில் முறைச் சிக்கல்கள்:**

கூத்தாடிகள் திருவிழாக்களின் போது மட்டும் கூத்து நிகழ்த்துதல் அல்லது நாடகம் நடத்துதல் என்ற அளவில் இவர்களுக்கு வேலை கிடைத்தது. வேலை இல்லாத நாட்களில் வீடு வீடாகச் சென்று "படி" வாங்குதல் என்ற முறையில் தானியங்களைப் பெற்று தங்களின் வாழ்க்கையை நடத்தி வந்தனர். போதிய வருமானம் இன்றி வறுமை தாண்டவம் ஆடியது. அவர்கள் வீட்டில் ஆண், பெண் என்ற இருவருக்கும் பொதுவாகவே தொழில் முறை அமைந்திருந்தது. "பறத்தெருவில் மொத்தமே அறுபது எழுபது வீடுகள் தான் இருக்கும். அதில் கூத்தாடிகளின் வீடுகள் ஐந்தாறு இருக்கும்"(5). பெண்ணாக இருந்தால் அதுவும் "பொட்டுக்கட்டி விடப்பட்டவளாய் இருந்தால் பள்ளு பாடுதல், தாலாட்டுப் பாடுதல், பூசாரியாக இருத்தல்" போன்ற நிலையில் தொழில் என்ற முறையில் பெண்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றனர்.

**சமத்துவம் காத்தல்:**

தாழ்த்தப்பட்ட மக்களைச் சமுதாயத்தின் மைய நீரோட்டத்திற்குக் கொண்டு வந்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சாதியால், பொருளாதாரத்தால், கல்வியால் பின்தங்கியிருக்கும் "மக்களை சமூகத் தகுதி பெற்றிருக்கும் பிற மக்களோடு சமமாகப் பழகவும், வாய்ப்புகளைப் பெறச் செய்யவும்,

**பாலியல் முறையில் ஒடுக்கப்படுதல்:**

இயற்கையின் அனைத்து ரகசியங்களைப் பொதிந்த உடலாக அதன் நீட்சியாகப் பெண்ணுடல் காணப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பெண்ணின் உடல்கள் தட்டையானதாகவும், ஒற்றைப் பரிணாம அர்த்தத்துடன் தான் புரிந்து கொள்ளப்படுகின்றன. உழைப்பிற்கான இயந்திரமாகவும் நாட்டின் பொருள் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பயன்படும் ஒன்றாக அர்த்தம் பெறுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

இந்நிலையில் தன்னுடலை முழுதும் தனக்கேயான ஒன்றாக்கி அதன் மற்ற பரிணாமங்களையும் கண்டடையும் முயற்சியில் ஈடுபட வேண்டும். சாதி வெறி புரையோடிப் போன சமூகத்தில் அடக்கு முறைகளுக்கு உட்படலையும், சமூகத்தின் வசைச் சொற்களையும் கூட தனக்கான ஆயுதம் ஆக்குபவள் பெண்.

சுயநலமிக்க ஆசைத்தீயில் பெண்மை கரிந்து போகிறது.

"இந்த புண்ணிய பாரத பூமியில்

கங்கைகள் இன்னும் வற்றிவிடவில்லையாம்"

சாக்கடைக்கும் தான் "துணி, ரவிக்கை, தாவணி ஆகியவற்றைப் பயன்படுத்தி பெண்கள் தம் மார்பை மறைக்கக்கூடாது"[8]. மேடையில் வேடம் போடும் தலைவனின் தனியறை ஆசைகளுக்குத் தீனியாகும் அவலம் நிறைந்த பெண்மை. விலை மகளிராக வாழும் பெண்களின் துயரம் அளவில்லாதது சாவுக்கு பின்னரே அவள் ஓய்வு கொள்கிறாள்.

ஊரையே விலைக்கு வாங்கி விடக் கூடிய அருமையான அழகு வரதட்சணை என்னும் வார்த்தையால் குலைக்கப்படும் கொடுமைகள்.

**முடிவுரை:**

தமிழ்ச் சமூகமானது சாதியக் கட்டுகளால் ஆனது. சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களும் ஆதிக்க சக்திகளால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகிறன்றனர்.

இட ஒதுக்கீடுகளும் அரசியல் திட்டங்களும் பொருளாதார நிலையில் தாழ்த்தப்பட்டோரை உயர்த்தினாலும் கூட, ஏதோ ஒன்றைக் கூறி இவர்கள் ஒதுக்கி வைக்கப்படும் நிலையே தொடர்கிறது. இவர்கள் எவ்வளவு பெரிய பொறுப்பில் அமர்ந்தாலும் கூட சாதிப் பெயரைச் சொல்லி மட்டும் தட்டும் நிலை தொடரத்தான் செய்கிறது. "சாதிகள் இல்லையடி பாப்பா" என்ற பாரதி பாடியதெல்லாம் ஏட்டளவிலேயே நிற்கிறது. சாதியை மறந்து மனித நேயத்தை நினைத்தாலே வீடும் நாடும் நலம்பெறும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**சான்றெண் விளக்கம்:**

1. அரங்க மல்லிகா; தலித் அறம், பக் .3
2. ஆ.சிவசுப்ரமணியன்; அடித்தள மக்கள் வரலாறு, பக் .43
3. இமயம்; செடல் -1, அத்-8, பக் .39
4. இதய வேந்தன் விழி பா;தலித் அழகியல், பக் .44
5. உங்கள் நூலகம் ஆகஸ்ட்; 2015 பக் . 91-92
6. சுகிர்தராணி தீண்டப்படாத முத்தம் பக் 25
7. தி. அமிர்த கணேசன் தொ.ஆ; ஈரோடு தமிழன்பன் ஆயிரம், பக். 114
8. பெருமாள் முருகன்; படைப்புகளில் விளிம்பு நிலை மாந்தர் பக். 51

**துணை நூற்பட்டியல்:**

1. ஆ. சிவசுப்ரமணியன்; தமிழகத்தில் அடிமை முறை பனுவல், சென்னை 2012.
2. ஆ. சிவசுப்ரமணியன்; அடித்தள மக்கள் வரலாறு பனுவல், என்.சி.பி.எச் 2018.
3. இமயம்; செடல், கிரியா பதிப்பகம், சென்னை.
4. இதய வேந்தன் விழி. பா 202 தலித் அழகியல் காவியா பதிப்பகம், சென்னை.
5. சுகிர்த ராணி, 2012 : தீண்டப்படாத முத்தம், காலச்சுவடு பப்ளிக்கேஷன்.
6. தி.அமிர்த கணேஷன் தொ.ஆ; ஈரோடு தமிழன்பன் ஆயிரம் விழிகள் பதிப்பகம், சென்னை 600 041, 2016, முதற்பதிப்பு, ஏப்ரல் 2006.
7. பத்மாவதி விவேகானந்தன்; தலித் இலக்கியம் ஓர் பார்வை, வள்ளி சுந்தர் பதிப்பகம் - 2001.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

8. பெருமாள் ஆ.கா; ஆய்வுக் கட்டுரைகள் பத்மா புக்ஸ்டால், நாகர்கோவில், மூன்றாம் பதிப்பு *1997*

9. முனைவர் அரங்க மல்லிகா; பெண்ணிய குரலதிர்வும் தலித் பெண்ணிய உடல் மொழியும், டிசம்பர் *2022,* காவ்யா பதிப்பகம்.